# புதுடெல்லி - நிதி அமைச்சர்கள் மாநாட்டில் அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!

**முதல் பக்கத் தொடர்ச்சி**

உதாரணமாக,

- பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின் (நகர்ப்புரம்) வீட்டுவசதி திட்டத்தின் கீழ், ஒன்றிய அரசு வீடு ஒன்றிற்கு 1.5 இலட்சம் ரூபாய் மட்டுமே வழங்குகிறது. அதே நேரத்தில் தமிழ்நாடு அரசு ஒன்றிற்கு 1214 இலட்சம் ரூபாயை தனது பங்களிப்பாக வழங்குகிறது.
- பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டத்தின் (கிராமப்புறம்) கீழ், ஒன்றிய அரசு வீடு ஒன்றிற்கு 0.72 இலட்சம் ரூபாய் மட்டுமே வழங்கும் நிலையில் மாநில அரசு வீடு ஒன்றிற்கு 1.68 லட்சம் ரூபாயை தன் பங்களிப்பாக வழங்கி வருகிறது.
- தேசிய சமூக நிதியுதவித் திட்டத்தின் கீழ், ஒன்றிய அரசு, முதியோர் ஓய்வூதியம் பெறும் பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் 200 ரூபாய் மற்றும் ஒவ்வொரு விதவைகள் மற்றும் மாற்றுத் திறனாளி பயனாளிகளுக்கும் மாதம் 300 ரூபாய் மட்டுமே தனது பங்களிப்பாக வழங்குகிறது. இத்தொகை கண்ணியமான வாழ்க்கை நடத்துவதற்குப் போதுமானதாக இல்லாததால், மற்ற மாநிலங்களைப் போலவே தமிழ்நாடு மாநிலமும் இத்தொகையை உயர்த்தி, இவ்வகையைச் சேர்ந்த ஒவ்வொரு பயனாளிகளுக்கும் மாதாந்திர ஓய்வூதியமாக 1,200 ரூபாயை வழங்குகிறது.

எனவே, தற்போதைய தேவைகளை கருத்தில் கொண்டு ஒன்றிய அரசு தனது பங்களிப்புத் தொகையை அதிகரித்து, ஒன்றிய அரசு நிதியுதவி வழங்கும் திட்டங்களில் குறைந்தபட்சம் 50% பங்களிப்பை வழங்க வேண்டுமென ஒன்றிய அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் மாநில திட்டங்களுக்கான நிதியை ஒதுக்கீடு செய்யும்போது, அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியான வரையறைகளையும் கட்டுப்பாடுகளையும் பின்பற்றக்கூடாது என ஒன்றிய அரசுக்கு நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். அதற்குப் பதிலாக, ஒன்றிய அரசு, கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரங்களை காப்பதற்காக, மாநில அரசுகளுடன் கூட்டாக இணைந்து, இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு உதவ வேண்டும்.

**கடன் வாங்குவதில் கட்டுப்பாடுகள்!**

ஒவ்வொரு ஆண்டும் மாநிலங்கள் பெறும் நிகர கடன் உச்சவரம்பு மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 3 விழுக்காடாக ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலத்திற்கு கணக்கிடப்பட்ட மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி தொடர்ந்து குறைத்து மதிப்பிடப்படுவதால், கடந்த நான்கு ஆண்டுகளில் சுமார் 8,500 கோடி ரூபாய் அளவில் கடன் பெறுவதில் குறைவு ஏற்பட்டுள்ளது. சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் வரிகள் வாயிலாக நிதி ஆதாரங்களை திரட்டுவதற்கான மாநிலங்களின் வரி விதிக்கும் அதிகாரங்கள் குறைக்கப்பட்ட சூழ்நிலையில் செலவினங்களின் சுமை மாநிலங்களுக்கு மாற்றப்படும் போது, கடன் வாங்குவதில் விதிக்கப்படும் கட்டுப்பாடு மாநில நிதிநிர்வாகத்தில் பலவீனத்தை ஏற்படுத்தும். அடுத்து வரும் ஆண்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணக்கிடுவதில் ஒன்றிய அரசு பொருத்தமான மாற்றங்களைச் செய்வது நியாயமானது என்று நான் நினைக்கிறேன். இந்தப் பரிந்துரையை ஒன்றிய அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 0.5% கூடுதல் கடன் பெறுவதற்கான நிபந்தனைகளில் ஒன்றாக, ஒவ்வொரு ஆண்டும் அதன் மின் பகிர்மான நிறுவனங்களின் (DISCOMS) இழப்புகளை வரையறுக்கப்பட்ட சதவீதத்தில் ஏற்றுக்கொள்ளுமாறு மாநிலங்களை ஒன்றிய அரசு கட்டாயப்படுத்தியுள்ளது. இத்தொகை வழங்கப்படவில்லையெனில், மாநிலங்களின் கடன் பெறும் உச்சவரம்பிலிருந்து ஒன்றிய அரசு அத்தொகையைக் கழித்துக் கொள்ளும். இந்த நிபந்தனையால், 202425ஆம் ஆண்டுவரையில், கூடுதல் கடன் தொகையாக ரூ.30,000 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசு பெறும் நோவில், அதன் பகிர்மான நிறுவனங்களுக்கு ஏறத்தாழ 52,000 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசு செலுத்த வேண்டிய சூழலை உருவாக்கியுள்ளது. இந்த கட்டுப்படுத்தும் நிபந்தனையால், தமிழக அரசு, கூடுதலாக, 22,000 கோடி ரூபாய் செலுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்த செலவினம், மாநிலங் களின் வளங்கள் மற்றும் வளர்ச்சி முன்னுரிமைகளுக்கு நிதியளிக்கும் திறன் ஆகியவற்றில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்துகிறது. 2015 ஆம் ஆண்டின் உதய் (UDAY) திட்டத்தைப் போலவே, பகிர்மான நிறுவனங்களின் (DISCOMS) இழப்புகளை ஏற்றுக்கொள்வதற்காக, மாநிலத்தின் நிதி பற்றாக்குறை மற்றும் கடன் உச்சவரம்பு கணக்கீட்டிலிருந்து விலக்களிக்குமாறு ஒன்றிய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**இரயில் திட்டங்களுக்கு அனுமதி வழங்குக!**

பெரிய அளவிலான உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டை ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்தி வருகிறது. அடுத்தடுத்து வந்த ஒன்றிய வரவுசெலவு திட்டங்களில் குறைந்த எண்ணிக்கையிலான இரயில்வே திட்டங்களே தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளன. சென்னையின் புறநகர் பகுதிகளில் பெருகிவரும் மக்கள்தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அப்பகுதிகளில் இரயில்வே உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும். மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக தொழிற் பகுதிகளில் புதிய இரயில்வே தடங்கள் அமைப்பதற்கான தேவை ஏற்பட்டுள்ளது. வரவிருக்கும் வரவுசெலவு திட்டத்தில் தமிழ்நாட்டில் பின்வரும் இரயில் திட்டங்களுக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்:

1). தாம்பரம் மற்றும் செங்கல்பட்டிற்கு இடையே 4ஆவது இருப்புப் பாதை வழித்தடம்.

2). திருப்பத்தூர் - கிருஷ்ணகிரி - ஓசூர் புதிய இருப்புப்பாதை வழித்தடம்

3). அருப்புக்கோட்டை வழியாக மதுரை தூத்துக்குடி (143.5 கி.மீ.)

4).மீஞ்சூர் - திருவள்ளூர் - ஸ்ரீபெரும்புதூர் - ஒரகடம் - சிங்கப் பெருமாள்கோயில் - மதுராந்தகம்

5).சேலம் - ஓசூர் - பெங்களூரு மற்றும் கோயம்புத்தூர் - எர்ணாகுளம் நீட்டிப்புகளுடன் கூடிய சென்னை சேலம்கோயம்புத்தூர் ஆகிய இடங்களை இணைக்கும் மிதஅதிவேக இரயில் வழித்தடம் (Semi High Speed Railway Corridor).

**தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களை அதிகப்படுத்துக!**

தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களை அதிக அளவில் மேற்கொள்ளுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். அத்தகைய திட்டங்களில் ஒன்று தாம்பரம் (NH32) உயர்மட்ட சாலை மற்றும் உயர்மட்ட சாலை மற்றும் செங்கல்பட்டுக்கு டையேயான செங்கல்பட்டிலிருந்து திண்டிவனம் வரையிலான அமைப்பதாகும், இது முன்னுரிமையில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

2005-ஆம் ஆண்டில் சென்னை கன்னியாகுமரி வழித்தடத் திட்டத்தில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் (NHAI) நான்கு வழி நெடுஞ்சாலையாக மேம்படுத்தப்பட்டது. தற்போது, போக்குவரத்து வாகனங்கள் பன்மடங்கு அதிகரித்து, சாலை விபத்துகளால் கடுமையான பாதிப்புகளும் உயிரிழப்புக்களும் ஏற்படுகிறது. இந்த வழித்தடத்தை விரிவாக்கும் புதிய திட்டத்திற்கு ஒன்றிய அரசு வரும் வரவு செலவு திட்டத்தில் போதிய நிதியை ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு இந்த வாய்ப்பை அளித்ததற்கு மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்துக்கொள்வதுடன் அனைத்து மாநிலங்களின் கருத்துக்களும் சாதகமாக பரிசீலிக்கப்படும் என்று நம்புகிறேன்.

இவ்வாறு தமிழக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார்.




புதுடெல்லியில் நடைபெற்ற நிதி அமைச்சர்கள் மாநாட்டில் ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களிடம் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தமிழ்நாட்டின் கோரிக்கைகள் குறித்து வலியுறுத்தினார்.

# கள்ளக்குறிச்சி சம்பவம்: சி.பி.ஐ. விசாரணை தேவையில்லை! அமைச்சர் ரகுபதி பேட்டி!

**முதல் பக்கத் தொடர்ச்சி**

சட்டமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு தரவில்லை, முதலமைச்சர் எங்களுக்கு பேச அனுமதி தரவில்லை; சட்டப் பேரவைத் தலைவர் எங்களுக்கு பேசுவதற்கு அனுமதி தரவில்லை என்று சொல்கிறார்கள். இதையெல்லாம், பத்திரிகை மற்றும் ஊடகங்களுக்கு சொன்னால் மக்கள் நம்பிவிடுவார்கள், மக்களை ஏமாற்றிவிடலாம் என்று தப்புக் கணக்கு போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**தோல்வியை மறைக்க முயற்சி!**

பாராளுமன்றத் தோல்வியை மறைப்பதற்காக இன்றைக்கு எடப்பாடி பழனிச்சாமியும் அவரைச் சேர்ந்தவர்களும் எத்தனை முயற்சிகள் செய்தாலும், ஜனநாயகத்தில் நம்பிக்கைக் கொண்டிருக்கின்ற முதலமைச்சர் என்றைக்குமே எதிர்க்கட்சிகளை மதிக்கக் கூடியவர் என்பதை கடந்த இரண்டு நாட்களாக இந்த சம்பவங்கள் மூலமாக நிரூபித்து இருக்கிறார் என்பதை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**கேள்வி** : முக்கியமான நிகழ்வுகளில் அவையை ஒத்தி வைத்து சட்டமன்றத்தில் இடம் இருக்கிறதா? இல்லையா?

**பதில்** : "0" hoursல் அவையை ஒத்தி வைத்து விவாதிக்கலாம். ஆனால், சட்டப் பேரவைத் தலைவரின் விருப்பத்தை பொறுத்தது, "0" hoursல் பேசலாம் அல்லது முன்கூட்டியே கேட்டார்கள் என்றால், அவையை ஒத்தி வைத்து விசாரிக்கவேண்டும் என்று சொன்னால், கேள்வி நேரம் முடிந்த பிறகு அவையை ஒத்தி வைத்து விசாரிப்பதற்கான வாய்ப்பு உண்டு. ஆனால் கேள்வி நேரத்தில் அது கிடையாது. வேண்டுமென்றே கேள்வி நேரத்தில் பிரச்சினை கிளப்பினார்கள் என்று சொன்னால், இங்கே ஏதாவது கலாட்டா செய்து அரசியல் செய்வதற்கு வாய்ப்பு கிடையாது. மக்கள் மன்றத்தில் தோற்றுவிட்டோம். மக்கள் நம்மை புறக்கணித்துவிட்டார்கள். எனவே, ஏதாவது அரசியல் செய்வதற்கு வாய்ப்பு கிடைக்குமா? என்று தேடிக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் கேள்வி நேரத்தின்போது செய்த கலாட்டா. அப்போதும் நாங்கள் பேசுவதற்கு அனுமதித்தோம். பேரவைத் தலைவர் உங்களுடைய கருத்துக்களை சொல்வதற்கு அவர்களுக்கு அனுமதி தந்தார். அதுதான் உண்மை.

**தவறு செய்தவர்கள் மீது உடனடி நடவடிக்கை!**

**கேள்வி** : காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அங்கு இருக்கக்கூடிய உள்ளாட்சிப் பிரதிநிதிகள், வருவாய்த்துறை அதிகாரிகள் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

**பதில்** : உடனடியாக சி.பி.சி.ஐ.டி. விசாரணை, ஓய்வு பெற்ற நீதியரசர் கோகுல் தாஸ் தலைமையில் ஒரு நபர் விசாரணைக் கமிஷன் இவை இரண்டையும் உடனடியாக அமைத்தவர் தமிழ்நாடு முதலமைச்சர் . யார் தவறு செய்தாலும், அவர் எந்த பொறுப்பில் இருந்தாலும் மீது நான் நடவடிக்கை எடுப்பேன் என்று முதலமைச்சர் உறுதியோடு சொல்லியிருக்கிறார். இரும்புக்கரம் கொண்டு அடக்குவேன் என்று சொல்லி, இது போன்ற நிகழ்வுகளுக்கு நாங்கள் ஒருபோதும் இடம் தர மாட்டோம். யாராக இருந்தாலும் மன்னிக்கவும் மாட்டோம். மறக்கவும் மாட்டோம். மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் கூறியிருக்கிறார்.

**கேள்வி** : சி.பி.ஐ.க்கு மாற்ற என்ன தயக்கம்? அது பற்றி...

**பதில்** : எதற்கு சி.பி.ஐ.? இதற்கு முன்னால் எவ்வளவோ சம்பவங்கள் நடந்திருக்கிறது. பண்ருட்டியில் நடந்தது. அப்போதெல்லாம் சி.பி.ஐ. விசாரணையா வைத்தார்கள். சி.பி.சி.ஐ.டி. வைத்தார்களா? நீதியரசர் கமிஷன் அமைத்தார்களா? நாங்கள் உடனடியாக சி.பி.சி.ஐ.டி. விசாரணை, ஒரு நபர் விசாரணை ; உடனடியாக நிவாரணம்; அனைத்தும் செய்கின்ற அரசு தளபதியின் அரசு. இதில் எதற்கு சி.பி.ஐ. விசாரணை கொண்டு வரவேண்டும்?

**கேள்வி** : சாத்தான்குளத்தில் 2 பேர் இறந்ததற்கே சி.பி.ஐ. விசாரணை வைத்தார்கள். அதுபற்றி.....

**பதில்** : அது இல்லை என்று சொல்லி மறைத்தார்கள். சாத்தான்குளத்தில் எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருந்தபோது அந்த சம்பவத்தை மறைக்க பார்த்தார். அவர்களுடைய சாவு, போலீஸ் தரப்பில் நடந்த சாவு என்று சொல்லவில்லை. அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், பெனிக்ஸ் என்பவர் மூச்சுத் திணறல் ஏற்பட்டு இறந்தார்; ஜெயராஜ் உடல்நலம் பாதிக்கப்பட்டு இறந்தார்; என்று அறிக்கை விட்டவர் அன்றைய முதலமைச்சர். இரண்டு பேரின் மரணத்தைப் பற்றி அன்றைக்கு அறிக்கை கொடுத்தார். அன்றைய முதலமைச்சர் சம்பவத்தையே மறைத்ததால், நாங்கள் சி.பி.ஐ. விசாரணை, நீதி விசாரணை எல்லாம் கேட்டோம். அடித்துக் கொலை செய்யப்பட்டார்கள் என்று சொல்கின்றபோது, அன்றைய முதலமைச்சர் மறைத்த காரணத்தினால் சி.பி.ஐ. விசாரணையை கேட்டோம். இன்று நாங்கள் மறைக்கவில்லையே. வெளிப்படையாக இருக்கின்றோம். அதனால் சி.பி.ஐ. விசாரணை தேவையில்லை.

**கள்ளச்சாராயத்தை அனுமதிக்க முடியாது!**

**கேள்வி** : கள்வராயன் மலை என்றாலே கள்ளச்சாராயம் காச்சி குடிக்கின்றார்கள் என்று உறுதிபடுத்துகிறது. அரசின் நடவடிக்கை பற்றி..........

**பதில்** : மெத்தனால் என்ற இரசாயனக் கலவையைக் கலந்து அருந்தியதால் வந்தது. கள்ளச்சாராயம் காய்ச்சுவது பற்றி கவனத்திற்கு வந்தாலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு தான் வருகிறது. பல வழக்குகள் போடப்படுகின்றன. பலர் மீது குண்டாஸ் வழக்குகளும் போடப்பட்டுள்ளன. அதற்கான ஆதாரங்களும் இருக்கின்றன. எனவே, அரசு நிச்சயமாக கள்ளச்சாராயத்தை அனுமதிக்க முடியாது. ஏன் என்றால், அது தேவையில்லாத ஒன்று. கள்ளச்சாராயம் காய்ச்சுவது தடுக்கப்பட வேண்டும் என்பதிலே, எல்லோரையும் விட அக்கறை உள்ள அரசு எங்களுடைய முதலமைச்சர் தலைமையிலான அரசு.

**கேள்வி** : இந்த நிகழ்விற்குப் பிறகு தான் சுமார் 1000 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்று தகவல் வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் கள்ளச்சாராயம் குறித்து கைது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏன் இவ்வளவு நாட்களாக கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை?

**பதில்** : வியாபாரிகள் என்று தெரிந்து யார்? யார்? எல்லாம் இந்த சம்பவத்திற்குப் பிறகு தெரிய வருகிறதோ, மீது முன்பே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எத்தனை வழக்குகள் இருக்கிறது என்று நீதிமன்றத்திற்கு சென்று பாருங்கள். குண்டர் சட்டத்தின் கீழ் குண்டாஸ் வழக்குகளும் போடப்பட்டுள்ளது. ஏதும் மறைக்கப்படவில்லை. ஏனென்றால், நாங்கள் மறைக்க வேண்டிய அவசியம் கிடையாது. பல வழக்குகள் இருக்கின்றது. அவற்றின் விவரங்கள் வேண்டுமேன்றால் நாங்கள் கொடுக்கின்றோம்.

**கேள்வி** : மூன்று ஆண்டுகளுக்கு முன்பாகவே, அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டுவந்திருக்கின்றார். அதன் மீது நடவடிக்கை எடுத்திருந்தால், இந்த 50 பேர் மரணம் தடுத்திருக்கலாம் என்பது அ.தி.மு.கவின் குற்றச்சாட்டு. அது பற்றி............

**பதில்** : அவர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருப்பது தொடர்பாக, அவையில் நான் பார்த்தால் தான் தெரியும். மற்றொன்றும் கூறுகிறோம். நாங்கள் ஏன் கள்ளச்சாராயத்தை அனுமதிக்க வேண்டும். எங்களுக்கு என்ன தேவை இருக்கிறது? எங்களுடைய முதலமைச்சர் அவர்களுக்கு என்ன அவசியம் இருக்கிறது? நாங்கள் ஏன் கள்ளச்சாராய வியாபாரிகளுக்கு உடந்தையாக இருக்க வேண்டும். அதில் எந்தவிதமான உடன்பாடும் கிடையாது. நாங்கள் அதை முற்றிலும் எதிர்க்கின்றவர்கள். எனவே, கள்ளச்சாராயம் முற்றிலும் ஒழிக்கவேண்டும் என்பதிலே, எல்லோரையும் விட அக்கறை உள்ள அரசு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு. எனவே, இதில் யாரும் அரசியல் செய்வதற்கு நாங்கள் இடம் கொடுக்க மாட்டோம்.

**மான நஷ்ட வழக்கு!**

**கேள்வி** : இந்த சம்பவம் தெரியாத இடத்தில் நடக்கவில்லை. நீதிமன்றத்திற்கு அருகில், அரசு அதிகாரிகள் இருக்கும் இடத்திலிருந்து 300 மீட்டர் அருகில் நடந்துள்ளது. இப்படி ஒரு சம்பவம் காவல் நிலையத்திற்கு தெரியவில்லை என்றால் அது தோல்வியில் தானே முடிந்துள்ளது? அது பற்றி.............

**பதில்** : உளவுத் துறை தகவல் கொடுத்துதான் அனைவரையும் பிடித்துக் கொண்டிருக்கின்றோம். அது எப்படி தோல்வியாக முடியும். திடீரென்று கொண்டுவந்ததில், தவறாக கலந்து குடித்ததால் ஏற்பட்ட ஒரு விபத்து. அதனால், உடனடியாக உரிய நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

**கேள்வி** : இந்த சம்பவத்தில் தொடர்பு இருப்பதாக எடப்பாடி பழனிச்சாமி கூறுகிறார்? அது பற்றி.......

**பதில்** : அதை நிரூபித்தால், எந்த நடவடிக்கைக்கும் நாங்கள் உட்படுகிறோம் என்று எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இரண்டு பேரின் பெயரினை குறிப்பிட்டு தெரிவித்திருக்கின்றார்கள். தயாராகத் தான் உள்ளார்கள். அவர்களுக்கும், எங்களுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. அதை நிரூபித்தால், எங்களுடைய பதவியை ராஜினாமா செய்கின்றோம் என்று தெரிவித்துள்ளார்கள். அப்படி நிரூபிக்கப்படவில்லையென்றால், நாங்கள் நடவடிக்கையும், மான நஷ்ட வழக்கினையும் தொடுப்போம் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

**கேள்வி** : மெத்தனால் இயக்கத்தினை கண்காணிக்கிறீர்களா?

**பதில்** : மெத்தனால் ஆலைகளுக்கு சட்டபடி வருகிறது. அதில், சில தவறுதலாக வெளியேறுகிறது. அதை இனி முழுமையாக கண்காணிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் அரசு செய்யும். மெத்தனால், இரசாயனக் கலவையும் கிடைக்காத அளவுக்கு நாங்கள் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வோம்.

**கேள்வி** : அதிகமான உறுப்பினர்கள், கள்ளச்சாராயம் காய்ச்சுவதற்கு மதுபானக் கடைகள் 12 மணிக்கு திறப்பதாலும், அதன் விலை அதிகமாக இருப்பதாலும் தான் என்று கூறுகிறார்கள்? அது பற்றி......

**பதில்** : மதுபானக் கடை காலையில் திறந்தால் காலையிலேயே குடிக்க வைக்கிறீர்கள் என்கிறீர்கள். இல்லையென்றால், குறிப்பிட்ட நேரத்தில் திறக்க வேண்டும் என்றும் கூறுகிறீர்கள். நீங்கள், அதிக விலைக்கு விற்பனை செய்வதாக சொல்கிறீர்கள். நாங்கள் எம்.ஆர்.பி தொகையை விட அதிகமாக விற்பதில்லை.

**கேள்வி** : கள்ளுக் கடையை திறப்பதற்கு என்ன தயக்கம்? அரசு மது என்று தெரிந்தும், மதுபானக்கடையில் மது விற்பனை செய்பவர்கள், ஏன் கள்ளுக்கடை விற்பனை செய்ய மறுக்கிறீர்கள்?

**அரசு இயந்திரம் முழு வீச்சில் செயல்படும்!**

**பதில்** : கள்ளுக்கடை திறப்பதற்கான அவசியம் இப்போது எழவில்லை. எழுந்தால், பிறகு பார்ப்போம்.

**கேள்வி** : இரண்டு ஆண்டுகளில் 80 மரணங்கள் ஏற்பட்டிருக்கிறது. இனி இது போன்று நடக்காமல் இருப்பதற்கு அரசு தயாராக இருக்கின்றதா? அது பற்றி.........

**பதில்** : நிச்சயமாக அரசு இயந்திரம் முழு வீச்சில் செயல்படும். எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல், எங்களுடைய தமிழ்நாடு முதலமைச்சர் உரிய நடவடிக்கை மேற்கொள்வார் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதற்கு முன்பு நிறைய சம்பவங்கள் நடந்திருக்கின்றது என்பது உங்களுக்குத் தெரியும். அதற்கெல்லாம் எந்த நீதி விசாரணையும் கிடையாது. அது போன்று சி.பி.சி.ஐ.டி., நீதிமன்ற விசாரணை என்று அனைத்தும் அமைத்திருப்பவர் தமிழ்நாடு முதலமைச்சர் .

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டியளித்தார்.

## வட்டச் செயலாளர் க.பாபு தலைமை! க.ஜெயராமன் முன்னிலை!

# பெரம்பூர் 36 (அ) வது வட்ட தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகள் - பொதுக்கூட்டம்!

## கோவி.லெனின் - ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ - கலாநிதி வீராசாமி எம்.பி. சிறப்புரை!

சென்னை, ஜூன். 23

சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்கு பகுதி, 36 (அ) வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (23.6.2024 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணியளவில், 14 வது மேற்கு குறுக்கு தெரு, எம்.கே.பி.நகர், பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகிறது.

36 (அ) வட்டக் கழகச் செயலாளர் க.பாபு தலைமை வகிக்கிறார். பகுதிச் செயலாளர் க. ஜெயராமன், ஏ.ஆர்.ஆர். மலைச்சாமி, எஸ்.சாக்ரடீஸ், கூல் பாயிண்ட் பிரகாஷ், எம்.டி.ஆர்.அப்துல் ரகுமான், பிரசிடென்சி எஸ்.சதீஷ், டி.வளன்ராஜ், நா.நடராஜ், கே.சேதுராமன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

க.அரிமூர்த்தி, கே.எம். குழந்தைசாமி, என்.சரவணன், எச்.மோகனா, எம். மதிவாணன், வி.முரளி, கே.ஜி. சீனிவாசன், எம். எஸ்.முருகன், துரை.பாஸ்கர், கே.வி.சோமசுந்தரம், மு.ஒய்லர், ஆர்.செல்வகுமார், ஆர்.ரம்ஜான் பீவி, ஏ.அந்தோணி சார்லஸ், சி.குணசேகரன், வி.ரமேஷ் குமார், எம்.ஏ.சந்திரன், ஜி.கணேஷ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி. லெனின், சென்னை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி விராசாமி, தலைமை கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ண மூர்த்தி ஆகியோர் பொதுக்கூட்டத்தில் சிறப்புரை ஆற்றி நலத்திட்ட உதவிகளை வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் அ.முருகன், இரா.நரேந்திரன், இரா.கருணாநிதி, எஸ்.ஆர். கமலக்கண்ணன், வி.தயாளன், ப.மதிவாணன், ந.சர்ப ஜெயதாஸ், ஏ.தமிழ்ச்செல்வன், டி.கமலக்கண்ணன், பி.அமுல், பி.ஆனந்தி, க.சர்மிளா காந்தி, த.ஆறுமுகம், ஆர்.எஸ்.மனோகரன், ஜி. மாரிமுத்து, கேபிள் கே.தினகரன், வி.முருகன், கே.வி. ராஜன், எம்.கார்த்திபன், எம்.உமாபதி, இரா.அரிதாஸ், கே.இ.செந்தமிழரசு, சி.எஸ்.ரவி மற்றும் கழக நிர்வாகி கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஜெ.ஜெ.அருண் சரத், எம்.அயன் சூசை, ல.கார்த்திக், யூ.கிஷோர் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

## இ.லாரன்ஸ் ஏற்பாடு ! எஸ்.புகழேந்தி தலைமை ! வ.பெ. சுரேஷ் முன்னிலை !

# 52வது வட்ட தி.மு.க. சார்பில் அறுசுவை உணவு - நலஉதவிகள்!

## ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி - ஐட்ரீம் இரா.மூர்த்தி வழங்குகின்றனர் !

சென்னை, ஜீன்22

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் மேற்கு பகுதி 52வது வட்ட திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா முன்னிட்டு மன்ற பெயர் பலகை திறப்பு நலத்திட்ட உதவுகள் மற்றும் அறுசுவை அசைவ உணவு வழங்கும் நிகழ்ச்சி இன்று (23.06.2024 (ஞாயிற்று கிழமை) பகல் 12 மணியளவில் பழைய ஆடு தொட்டி சாலை ஸ்டான்லி மருத்துவமனை கேட் அருகில் நடைபெறுகிறது.

இதில் வட்ட பொருளாளர் இ.லாரன்ஸ் நிகழ்ச்சிகான ஏற்பாட்டினை செய்துள்ளார்.வட்ட செயலாளர் எஸ்.புகழேந்தி தலைமை வகிக்கிறார். பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ் முன்னிலை வகிக்கிறார்.

சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம் இரா. மூர்த்தி, எம்.எல்.ஏ, ஆகியோர் நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்குகின்றனர்.

இந்நிகழ்வில் மாநில கழக மாவட்ட கழக பகுதி கழக வட்ட கழக , நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொள்கிறார்கள்.

வட்ட துணை செயலாளர் இ.லூர்தர் நன்றி கூறுகின்றார்.